I-UN-503

உ

# தமிழ்நாடு தெய்விகப் பேரவை அமைப்பு விதிகள்

✻

தமிழ்நாடு தெய்விகப் பேரவை
9, மகாராஜா சூரியராவ் சாலை, சென்னை-600 018
1975

உ

கடவுள் துணை

# தமிழ்நாடு தெய்விகப் பேரவை

சென்னை-600 018

## 1. அமைப்பு விதிகள்

1. (1) தமிழ்நாடு தெய்விகப் பேரவை (இனிமேல் இங்கு இது 'பேரவை' என்றே குறிக்கப்படும்). இந்து சமய மக்கள் தங்களுடைய சமயத்தின் பெருமையை உணரவும், தங்கள் சமய நம்பிக்கையை மேன்மேலும் உறுதிப்படுத்திக் கொள்ளவும், இந்து தருமத்தையும், ஒழுக்கங்களையும் கடைப்பிடித்து நல்வாழ்வு வாழவும், துணை புரிவதற்கு ஏற்ற சமயப் பணிகளை ஆற்றி வரும் அமைப்பாக இருக்கும்.

(2) இந்து சமய மக்களிடையே கருத்து வேறுபாடுகள் நிலவி வரும் செய்திகளை அறவே விலக்கி, இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளில் நம்பிக்கையுள்ள மக்கள் எல்லோருக்கும் நலம் பயப்பனவாக, மேற்கூறிய சமயப் பணிகள் அமைதல் வேண்டும்.

(3) இந்தப் பேரவையானது 1860 ஆம் ஆண்டின் சபைகளின் பதிவுச் சட்டத்தின்படி பதிவு செய்யப் பட வேண்டும். (1860 ஆம் ஆண்டின் 21-ஆம் மத்தியச் சட்டம்)

(4) இப் பேரவையின் தலைமை அலுவலகம், சென்னை நகரில் இருக்கும்.

## 2. வரையறைகள்

இந்த அமைப்பு விதிகளில், சந்தர்ப்பமானது வேறு வகையாகப் பொருள் குறிக்க நேர்ந்தாலொழிய,

(1) 'மடாதிபதி உறுப்பினர்' என்றால் மாநிலக் குழுவின் உறுப்பினராக இருப்பவரையும்,

(2) 'ஆணையர்' என்றால் அற நிலைய ஆட்சித்துறையின் ஆணையரையும்,

(3) 'துணை ஆணையர்' என்றால் அற நிலைய ஆட்சித்துறையின் துணை ஆணையரையும்,

(4) 'உதவி ஆணையர்' என்றால் அறநிலைய ஆட்சித்துறையின் உதவி ஆணையரையும்,

(5) 'அமைப்பு விதிகள்' என்றால் தமிழ்நாடு தெய்விகப் பேரவையின் அமைப்பு விதிகளையும்,

(6) 'சங்கம்' என்றால் அமைப்பு விதிகளின் தொகுதி 5–ஆவது பகுதியில் அமைக்கப்படும் ஓர் உள்ளூர்ச் சங்கத்தையும் குறிக்கும்.

## 3. மாநிலக் குழு

1. இந்தப் பேரவையின் வேலையானது கீழ்க்காணும் திருமடங்களின் தலைவர்களைக் கொண்ட ஒரு மாநிலக் குழுவினாலும், ஆணையராலும் நடத்தப் பெறும்.

1. ஸ்ரீ திருவாவடுதுறை ஆதீனம்.
2. ஸ்ரீ தருமபுர ஆதீனம்.
3. ஸ்ரீ காஞ்சி காமகோடி பீடம்.
4. ஸ்ரீ திருக்குறுங்குடி மடம்.
5. ஸ்ரீ திருப்பனந்தாள் காசி மடம்.
6. மதுரை, ஸ்ரீ திருஞானசம்பந்த சுவாமிகள் ஆதீனம்.
7. குன்றக்குடி, ஸ்ரீ திருவண்ணாமலை ஆதீனம்.
8. ஸ்ரீ வியாசராய மடம்.
9. ஸ்ரீ ராகவேந்திர சுவாமிகள் மடம் (நஞ்சன்கூடு).
10. காஞ்சிபுரம், ஸ்ரீ ஞானப்பிரகாச தேசிக சுவாமிகள் ஆதீனம்.
11. மயிலம், ஸ்ரீ பொம்மபுரம் ஆதீனம்.
12. திருவண்ணாமலை, ஸ்ரீ ஈசானிய மடம்.
13. பேரூர், ஸ்ரீ சாந்தலிங்க சுவாமிகள் மடம்.
14. கோயம்புத்தூர், ஸ்ரீ சிரவணபுரம் கௌமார மடம்.
15. திருப்பாதிரிப்புலியூர், ஸ்ரீ ஞானியார் மடம்.

2. மாநிலக் குழுவானது எந்தச் சமயத்திலும், அதன் உறுப்பினர்கள் அனைவருடைய ஒருமனப்பட்ட இசைவை எழுத்தின் மூலம் சுற்றறிக்கையில் பெற்று, ஒன்று அல்லது பல மடங்களின் தலைவர்களை மாநிலக் குழுவின் உறுப்பினர்களாக மேலும் சேர்த்துக் கொள்ளலாம்.

3. அ. மாநிலக் குழுவானது ஒரு கூட்டமைப்பாகவும், ஒரு நிலையான முத்திரை யுடையதாகவும் இருத்தல் வேண்டும். மாநிலக் குழு தன்னுடைய செயலாளரின் பெயரினாலேயே வழக்கிடலாம், வழக்கிடப்படலாம்.

ஆ. மாநிலக் குழுவானது ஐந்து உறுப்பினர்களுக்குக் குறையாத உறுப்பினர்களைக் கொண்டதாகும். மாநிலக் குழுவானது எந்தச் சமயத்திலும் மாநிலக் குழுக் கூட்டத்திற்கு வந்துள்ள பெரும்பான்மையான உறுப்பினர்களின் இசைவு பெற்று ஒன்று அல்லது பல மடங்களின் தலைவர்களை மாநிலக் குழுவின் உறுப்பினர்களாக மேலும் சேர்த்துக் கொள்ளலாம்.

இப் பேரவைக்கு ஆணையர், தம் அலுவல் நிலையினால் துணைத் தலைவராக இருத்தல் வேண்டும். பேரவையின் நிர்வாக வேலைகள் அவரால் மேற்பார்க்கப் பெறுதல் வேண்டும்.

4. (1) மாநிலக் குழுவுக்குத் துணை ஆணையர் அல்லது உதவி ஆணையர் தரத்தில் துணைத் தலைவரால் நியமிக்கப்படும் ஒரு செயலாளர் இருத்தல் வேண்டும். அவர் தலைவர், துணைத் தலைவரின் ஆட்சியின் கீழும் மேற்பார்வையிலும் பணியாற்றுதல் வேண்டும். மாநிலக் குழுவினர் தீர்மானிப்பதற்கு ஏற்ப, செயலாளரின் அலுவலகத்திற்கு வேண்டிய பணியாளர்தொகுதி நியமிக்கப்படும்.

மாநிலக் குழுவிற்கு ஒரு தலைவரும் ஒரு துணைத் தலைவரும் இருத்தல் வேண்டும்.

(2) பேரவையின் தலைவர், தேர்வுக்காகக் கூட்டப்பெறும் மாநிலக் குழுவின் சிறப்பியல் கூட்டத்திற்கு வந்துள்ள பெரும்பான்மையான உறுப்பினர்களின் இசைவோடு தேர்ந்தெடுக்கப்படுவார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பெற்ற பேரவையின் தலைவர் அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பெற்ற தேதியிலிருந்து மூன்று ஆண்டுகளுக்குப் பதவி வகிப்பார்.

5. (அ) மாநிலக் குழுவானது பேரவையின் அமைப்பு விதிகளைச் செயல்படுத்துவதற்குத் தொடர்புடைய வேலைகளைக் கவனிக்க ஆண்டுக்கு இரண்டு முறையாவது கூடுதல் வேண்டும். அந்தந்த ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தை வகுக்க மாநிலக் குழுவின் சிறப்புக் கூட்டம் அந்தந்த ஆண்டின் மார்ச்சு மாதத்தில் கூடுதல் வேண்டும். அந்தந்த ஆண்டு வரவு செலவுத் திட்டம் அந்தந்த ஆண்டு மே மாதத்திற்குள் மாநிலக் குழுவால் அங்கீகரிக்கப்பெறல் வேண்டும். எல்லா மாநிலக்குழு கூட்டங்களுக்கும் 15 நாள் அறிவிப்பு கொடுக்கப் பெறல் வேண்டும்.

(ஆ) மாநிலக் குழுவின் கூட்டத்திற்கு உறுப்பினர்களின் மொத்த எண்ணில் மூன்றில் ஒரு பங்கு அல்லது ஐந்து எண்ணம் குறை நிறைவெண் (Quorum) இருத்தல் வேண்டும்.

(இ) ஒரு கூட்டத்திற்குக் குறை நிறைவெண் இல்லாவிட்டால் அக்கூட்டம் அதற்குப் பதினைந்து நாட்களுக்குப் பின் அதே நேரத்திற்குத் தள்ளி வைக்கப் பெறல்வேண்டும். அவ்வாறு நடைபெறும் கூட்டத்திற்குக் கூட்ட குறை நிறைவெண் கருதப்படாமல் கூட்டத்திற்கு வந்திருக்கும் மாநிலக்குழு உறுப்பினர்களில் பெரும்பான்மையினரின் இசைவைக் கொண்டு முடிவுகள் எடுக்கப்படும்.

(ஈ) தலைவர் ஒரு கூட்டத்திற்கு வர இயலாவிட்டால் அவர் மற்றொரு மடாதிபதி உறுப்பினரை அத்தகைய கூட்டத்திற்குத் தலைமை தாங்கும்படி, (நியமிக்கப் படுபவருக்கும், செயலாளருக்கும் அறிவித்து விட்டு) நியமிக்கலாம்; நியமிக்கப்படுபவர் அக்கூட்டத்தில் வந்திருக்கவில்லை. அல்லது அத்தகைய ஒரு நியமனம் செய்யப் பெறவில்லை என்றால், அக் கூட்டத்திற்கு வந்திருக்கும் மடாதிபதி உறுப்பினர்களில், தங்களுக்குள் தேர்ந்தெடுக்கும்படும் மடாதிபதி ஒருவர் அக் கூட்டத்திற்குத் தலைமை தாங்குதல் வேண்டும்.

(உ) மாநிலக் குழுவின் தீர்மானங்கள் எல்லாம், வந்துள்ள உறுப்பினர்களின் பெரும்பாலான வாக்குகளைக் கொண்டு நிறைவேற்றப்படல் வேண்டும். வாக்குகளில் சமநிலை ஏற்படுமாயின், தலைமை தாங்குபவர் இரண்டாவது முறையும் வாக்கு அளிக்க உரிமையுடையவர் ஆவார்.

(ஊ) பேரவையின் துணைத் தலைவர் அவர்கள் மாநிலக் குழுவின் ஒரு கூட்டம் நடப்பதற்கு முன்னரே விரைவாக முடிவு செய்யப்பெறல் வேண்டும் என்று கருதும் செய்திகளைச் சுற்றறிக்கை மூலம் அனுப்பி மாநிலக்குழு உறுப்பினர்களின் பெரும் பான்மையான உறுப்பினர்களின் இசைவுபெற்று முடிவு செய்யலாம்.

6. (1) மாநிலக் குழுத் தலைவரும், மற்றும் இந்து சமய சாத்திரங்களில் தேர்ச்சி பெற்றுள்ள எட்டுப் பேர் களும் கொண்ட பதிப்பாளர் குழு ஒன்றை, கீழ்க் குறிக்கப் பெறும் வெளியீடுகளைத் தொகுக்கவும், வெளியிடுதற்குரிய ஏற்பாடுகள் செய்யவும் நிறுவுதல் வேண்டும்.

அ. தோத்திரத் திரட்டுகள் (நித்திய பாராயணத் துக்குரியவை ; எளியவை)

ஆ. இந்து சமயத்தின் அடிப்படைக் கொள்கைகளை விளக்கும் எளிய சிறு நூல்கள் அல்லது நூல்கள்.

இ. சமயப் பொருள் பற்றிய ஐயங்களைத் தெளிவிக் கும் வெளியீடுகள்.

ஈ. இந்து சமயத்தினை மறுக்கும் கூற்றுக்கள் அல்லது பிரசாரங்களுக்கு விடை கூறும் வெளியீடுகள்.

உ. தொடக்கப்பள்ளிச் சிறுவர் சிறுமியர்களுக்கு இலவசமாக வழங்குவதற்காக ஔவையார் அருளிய ஆத்திசூடி, கொன்றைவேந்தன், நல்வழி, சிவப்பிரகாசர் அருளிய நன்னெறி முதலிய இந்து சமய நீதிநூல் வெளியீடுகள்.

ஊ. உயர் தொடக்கப் பள்ளிகளின் மாணவர்களுக்கு வழங்குவதற்காகத் திருக்குறள், அறத்துப் பால், பொருட்பால், நீதிநெறி விளக்கம் முதலிய நூல் வெளியீடுகள்.

எ. ஒப்புவித்தற் போட்டிக்குத் திருமுறைப் பாடல் கள் தொகுத்து வெளியிடுதல்.

(2) பேரவையின் தலைவரே, பதிப்பாளர் குழுத் தலைவ ராவார். மற்ற உறுப்பினர்கள் மூன்றாண்டுக் கால அளவு பதவி வகிப்பர்.

(3) பேரவையின் செயலாளர் மேலே உ, ஊ, எ, ஏ பிரிவுகளில் குறிக்கப்பெற்ற நூல்களிலிருந்து பல்வேறு பகுதிகளை ஒப்புவித்தல் போட்டிகளுக்கும், அப்போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கும் பரிசுகள் வழங்குவதற்கு உரிய ஏற்பாடுகள் செய்ய வேண்டும்.

7. மாநிலக் குழுவானது :

(1) அதற்கெனத் தொடங்கப்பெற்ற ஒன்று அல்லது பல பள்ளிகளில், இந்து சமயப் பிரசாரகர்களுக்குப் பயிற்சி அளிக்க ஒரு வழிமுறை வகுத்து, பயிற்சி பெறுபவர்கட்குரிய தகுதிகள், பயிற்சிக்கால அளவு, பயிற்சிக்குரிய பாடத் திட்டம், மற்றும் தொடர்புடைய செய்திகள் ஆகியவற்றை ஆராய்ந்து ஒரு திட்டம் வகுக்க வேண்டும்.

(2) அர்ச்சகர்களுக்கும், ஓதுவார்களுக்கும் தேவையான தத்துவ, சாத்திரப் பயிற்சி அளிக்க, ஒன்று அல்லது பல பாடசாலைகளை நடத்துவதற்கும் திட்டங்கள் வகுத்தல் வேண்டும்.

(3) இந்து சமயத்திற்குப் பயன்படத்தக்க வகையில் பள்ளிகளைத் திறக்கவும், கல்லூரிகளைத் தொடங்கவும், நடந்துகொண்டிருப்பவைகளைப் பொறுப்பேற்று நடத்தவும் நடவடிக்கை மேற்கொள்ளும்.

8. மாநிலத்திலுள்ள திருமடங்களாலும், கோயில்களாலும் நடத்தப்பெறும் கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்களுள், தாமாக முன் வந்து கற்க விரும்பும் மாணவர்கட்கு வடமொழியின் செயலியல் அறிவு (Working-Knowledge) அளிப்பதில், மாநிலக்குழுவானது தக்க வசதிகளைச் செய்து தரும்.

9. மாநிலத்திலுள்ள இந்து மக்களின் சமய நலத்திற்குத் தேவையான மேலும் பல வசதிகளை வழங்குதல் குறித்து, மாநிலக் குழு அவ்வப்பொழுது ஆராயவும், ஆராய்ந்து செய்யும் தீர்மானங்களைச் செயற்படுத்தவும், தக்க நடவடிக்கைகளை எடுக்கும்.

10. தக்க வசதிகள் அனைத்தும் நிறைந்த பெரிய மருத்துவ விடுதிகளைத் தகுந்த இடங்களில் நிறுவுவதற்கு வேண்டிய நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

## 4. மாவட்டக் குழுக்கள்

11. ஒவ்வொரு வருவாய்த்துறை மாவட்டத்திற்கும் ஒரு மாவட்டக் குழு இருத்தல் வேண்டும். தஞ்சாவூர் மாவட்டத்திற்கு மட்டும் நீதி இயல் மாவட்ட அமைப்பை யொட்டி, கிழக்குத் தஞ்சைக்கும், மேற்குத் தஞ்சைக்குமாக இரண்டு மாவட்டக் குழுக்கள் இருத்தல் வேண்டும்.

12. ஒவ்வொரு மாவட்டக் குழுவிற்கும் பேராளர்களின் மாநாட்டில் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒருவர் தலைவராகவும் சம்பந்தப்பட்ட மாவட்டத்தின் உதவி ஆணையர் துணைத் தலைவராகவும் இருப்பார்கள். மற்றும் செயற்குழு உறுப்பினர்களை மாவட்ட மாநாடே தேர்ந்தெடுத்து நியமிக்கும். மாவட்டக் குழு, தமது உறுப்பினர்களில் ஒருவரைப் பொதுச்செயலாளராகவும், அந்த மாவட்டத்தின் ஒவ்வொரு வட்டத்திற்கும் உரிய செயலாளர்களையும் தேர்ந்தெடுக்கும்.

(1) மாவட்டத்தின் எந்தப் பகுதியிலாவது இவ்வமைப்பு விதிகளின்படி வகுக்கப்பெற்ற பணிகளுள் ஏதேனும் ஒன்றைச் செய்ய, செயற்படுத்த முற்பட்டுள்ள ஒவ்வொரு மடமும் ஓர் உறுப்பினரை நியமிக்கலாம்.

(2) மாவட்டத்திலுள்ள ஐந்துக்கு மேற்படாத கோவில்களின் பிரதிநிதிகளாக ஒவ்வொரு கோயிலுக்கும் ஓர் உறுப்பினரை ஆணையர் நியமிப்பார்.

(3) மாவட்டத்தில் வசிக்கும் அலுவல் சார்பற்ற ஐந்து பேர்கள் தலைவரால் நியமிக்கப்படுவர்.

13. ஒவ்வொரு உறுப்பினரின் நியமனமும் மூன்றாண்டுக் கால அளவுடையதாகும்.

14. (1) மாவட்டக் குழுவின் கூட்டம், மாவட்டப் பேரவையின் அலுவலகத்தில் அல்லது உதவி ஆணையரின் அலுவலகத்தில் மூன்று மாதத்திற்கு ஒரு முறையேனும் கூடுதல் வேண்டும். உதவி ஆணையர் அவசியமென்று கருதும் பொழுதெல்லாம், மேற்கொண்டும் கூட்டங்கள் கூட்டப் பெறலாம்.

(2) மொத்த உறுப்பினர் எண்ணில் தலைவரையும் சேர்த்து மூன்றில் ஒரு பகுதி, ஒரு கூட்டத்திற்குக் குறை நிறைவெண்ணாக இருத்தல் வேண்டும். கூட்டத்திற்குரிய குறை நிறைவெண் இல்லாமற்

போனால், அடுத்த வாரத்தில் அதே நாளில் அதே நேரத்திற்குத் தள்ளிவைக்கப் பெறல் வேண்டும். அங்ஙனம் தள்ளி வைக்கப்பெறும் கூட்டத்திற்குக் குறை நிறைவெண் வேண்டுவதில்லை.

(3) மாவட்டக் குழுவின் தீர்மானங்கள், கூட்டத்திற்கு வந்திருக்கும் உறுப்பினர்களின் பெரும்பாலான வாக்குகளைக் கொண்டு, நிறைவேற்றப்படல் வேண்டும். வாக்குகள் சமநிலைப்படுமாயின், தலைவருக்கு இரண்டாவது வாக்கு உண்டு.

15. மாவட்டக்குழு அதன் பகுதியில் நடைபெறும் பணிகளை மேற்பார்வையிடுதல் வேண்டும். சிறப்பாகக் கீழ் வரும் பணிகளை அது செய்யும் :—

(1) ஆண்டின் வரவு செலவுத் திட்டத்தைத் தயார்செய்து மாநிலக் குழுவுக்கு அது வரையறுக்கும் நாளுக்கு முன்னரே மாவட்டக் குழு அனுப்பி வைத்தல் வேண்டும்.

(2) மாவட்டக் குழு தன் எல்லைக்கு உட்பட்ட பகுதியிலுள்ள உள்ளூர்ச் சங்கங்களிடமிருந்து, இந்து சமய உண்மைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றிற்கு மாருகச் செய்யப்படும் பிரசாரங்கள் மற்றும் இந்து சமயக் கொள்கைகள் அல்லது நம்பிக்கைகள் பற்றிய இகழ்வுரைகள் குறித்து ஏதேனும் தகவல் அறிக்கைகள் வரப்பெற்ருல், அவற்றை ஆராய்தல் வேண்டும். ஆராய்ந்து தக்க நடவடிக்கை எடுத்தற்பொருட்டுத் தன் கருத்துரைகளுடன் அவற்றைப் பதிப்பாளர் குழுவிற்கு அனுப்புதல் வேண்டும்.

(3) இந்துக்கள் தம்முடைய பிள்ளைகளைப் படிக்க வைப்பதற்குரிய பள்ளிக்கூடங்கள் இல்லாமல் துன்புறும் பகுதிகளில் பள்ளிகள், கல்லூரிகள், கீழ்த்திசைக் கலைப் பள்ளிகள் தேவைக்கேற்ப மாநிலக் குழுவிலிருந்து பெறப்பெறும் பேரவையின் நிதியிலிருந்து துவக்கப் பெறலாம். அப்பள்ளிகளில் இந்து சமயத்திற்கு ஒத்த நீதி போதனையும், சமய போதனையும் பாடத்தில் சேர்க்கப் பெறல் வேண்டும்.

(4) மாவட்டக்குழு அனாதை இல்லங்கள் அவசியம் என்று தோன்றும் இடங்களில் அவற்றைத் தொடங்குவதற்குரிய திட்டங்களை மாநிலக்குழுவின் ஒப்புதலுடன் முயற்சியில் ஈடுபட்டுத் தொடங்கிப் பணி செய்யலாம்.

(5) எந்தெந்தப் பகுதிகளில் மருத்துவ வசதிகள் இல்லையோ, இருந்தாலும் போதியதாகவும், பொருந்தியதாகவும் இல்லையோ, அந்தந்தப் பகுதிகளில் மருத்துவ விடுதிகள் அமைத்து நடத்துவதற்குரிய திட்டங்களை வகுத்து, மாநிலக் குழுவிற்கு மாவட்டக் குழு அனுப்புதல் வேண்டும். அத்தகைய மருத்துவ விடுதிகளில் ஆயுர்வேதம், சித்தம், ஹோமியோபதி அல்லது அல்லோபதி முறைகளையொட்டி, அந்தந்தப் பகுதிகளில் தேவைக்கேற்பச் சிகிச்சை அளிக்கப் படலாம்.

(6) மாவட்டக் குழு தன் எல்லைக்குட்பட்ட திருமடங்களும், கோயில்களும் நடத்துகிற கல்வி நிலையங்களில் பயிலும் மாணவர்கள், தாமாகவே விரும்பிச் செயலியல் வடமொழி அறிவு பெறுவதற்கு முன் வந்தால், அவர்களுக்குத் தகுந்த வசதிகளை வழங்குவதற்குரிய திட்டங்களை மாநிலக் குழுவுக்கு அனுப்புதல் வேண்டும்.

## 5. உள்ளூர்ச் சங்கங்கள்

16. (1) ஒவ்வொரு கிராமத்திலும் அல்லது அடுத்தடுத்த, அருகிலுள்ள கிராமங்கள், பல சேர்ந்து வசதியான தொகுதிகளிலும் அல்லது பெரிய நகரங்களின் வெவ்வேறு பகுதிகளிலும் ஆங்காங்கே ஏற்படுத்தப்பெற்று மாநிலக்குழுவில் அங்கீகரிக்கப் பெறும் அடிப்படைப் பணிகளை ஆற்றுதல் வேண்டும். மாநிலக்குழு அவ்வப்பொழுது நிர்ணயிக்கும் பங்களிப்புத் தொகைகளைத் தரவேண்டும்.

2. ஒவ்வொரு சங்கத்திற்கும் இதர உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப்பெற்ற ஒரு செயலாளருடன் ஒரு பொருளாளரும் இருத்தல் வேண்டும். சங்கத்தின் செயலாளருடன் பொருளாளர் சங்கத்தின் வரவு செலவுக் கணக்குகள் வைத்துக் கொள்ளுதல் வேண்டும். சங்கத்தின் நிதியானது சங்கத்தின் பெயரில் ஒப்புதல் பெற்ற வங்கியில் இடம்பெறல் வேண்டும். வங்கிக் கணக்கு தலைவராலும் சேர்த்து இயக்கப் பெறுதல் வேண்டும்.

17. உள்ளூர்ச் சங்கங்கள் கீழ்க்குறிக்கப்படும் அடிப்படைப் பணிகளை ஆற்றி வருதல் வேண்டும்.

(1) வாரத்தில் ஒருமுறை, அவ்வப் பகுதியிலுள்ள மக்களின் வசதிக்கேற்ற ஒருநாளில் வசதியான நல்ல திறந்த வெளியிடத்தில் கூட்டுப் பிரார்த்தனை ஏற்படுத்தி நடத்தி வருதல் வேண்டும். வெவ்வேறு பகுதிகளில் அல்லது ஊர்களில் வாழ்கின்ற மக்களின் வசதிக்கேற்ப அந்தந்த ஊரில் உள்ள பிரதான சிவ-விஷ்ணு ஆலயங்களில் வாரத்தில் குறிப்பிட்ட ஒரு நாளில் வார வழிபாடு நடத்த வேண்டும்.

(2) வில்லுப்பாட்டு, பொம்மலாட்டம், புராண இதிகாசச் சொற்பொழிவுகள், கோயில்கள், அல்லது கோயில் விழாக்கள் அல்லது வேறு இந்து சமய நிகழ்ச்சிகள் போன்றவற்றைக் காட்டும் படக் காட்சிகளுடன் வார வழிபாடு தொடங்கப்பெறுதல் வேண்டும். இதற்குப் பின்னர், மறுநாள் ஒவ்வோர் இந்துவுக்கும் நித்திய நாம ஜெபம், எங்ஙனம் முதன்மையும் அவசியமும் வாய்ந்தது என்பதனைப்பற்றி, சிறு விளக்கச் சொற்பொழிவு நடத்துதலும், தக்க அறிஞர்களைக்கொண்டு நாம ஜெபம் எவ்வாறு செய்வது என்பதனைச் செய்து காட்டுதலும் வேண்டும். இவற்றிற்குப் பின் சபையிலுள்ள மக்கள் மௌனத் தியானம் செய்தலும், அதனையடுத்துத் தேர்ந்தெடுக்கப் பெற்ற நாமாவளிகளை அவைகளில் தேர்ச்சிபெற்ற அறிஞர் ஒருவர் முன் சொல்ல, மற்ற மக்கள் அவற்றைப் பின்பற்றிப் பாடுதலும் வேண்டும்.

(3) இங்ஙனம் பயிற்சியளிக்கப்பெற்ற பிறகு, மக்கள் தாங்களாகவே தத்தம் வீடுகளில் நீர் பருகுவதற்கோ அல்லது உணவு உட்கொள்வதற்கோ, முன்னர் ஒரு முறையும், இரவு உணவு உட்கொள்ளும் முன்னர் ஒரு முறையும், அவரவர்களின் சமயத்திற்கேற்பத் திருமுறை அல்லது திவ்வியப் பிரபந்தங்களில் பொருத்தமும் சுருக்கமும் உடைய சில திருப்பாடல்களைப் பாடி, நாம ஜெபம் செய்தல் வேண்டும்.

(4) ஓதுவார்கள் அல்லது மற்ற தக்க அறிஞர்களைக் கொண்டு தன் எல்லைக்கு உட்பட்ட பகுதியில் வாழும் இந்து மக்களுக்குத் தெரிந்தெடுக்கப்பெற்ற சமயப் பாடல்களைப் பாராயண முறையில் பிழையின்றித்

திருத்தமாகப் பாடுவது எப்படி என்பதைக் கற்பிப்பதற்கு உள்ளூர்ச் சங்கங்கள் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(5) பதிப்பாளர் குழு குறிப்பிடுவதற்கேற்ப, அவ்வப் பகுதியிலுள்ள பள்ளிகளில் சமய சாத்திரங்கள், நீதி இலக்கியங்கள் இவற்றிலுள்ள தேர்வுப் பகுதிகளில் ஒப்புவித்தற் போட்டி நடத்துவதற்கும், பரிசு அளித்தலுக்கும் தக்க ஏற்பாடுகளை உள்ளூர்ச் சங்கங்கள் செய்தல் வேண்டும்.

(6) இந்து சமய நம்பிக்கைகள், பழக்க வழக்கங்கள் ஆகியவற்றிற்கு மாருகச் செய்யப்படும் பிரசாரங்கள் அல்லது வேறு ஏதேனும் இகழுரைகள் பற்றிய தகவல்களை உள்ளூர்ச் சங்கங்கள் மாவட்டக் குழுவிற்குத் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் பொருட்டு விரைந்து அனுப்புதல் வேண்டும்.

(7) எந்தெந்தப் பகுதிகளில் கோயிலே இல்லையோ அங்கெல்லாம் குறைந்தது ஒரு விநாயகர் கோயிலோ அல்லது அனுமார் கோயிலோ அல்லது அப்பகுதி மக்கள் போற்றும் இறைவனின் வேறு திருவுருவம் அமைக்கப்படும் கோயிலோ கட்டப் பெறுவதற்கு உள்ளூர்ச் சங்கங்கள் ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(8) கோயில்கள், சிறப்பாகப் பாடல் பெற்ற கோயில்கள் மற்றும் அப்பகுதியிலுள்ள கிராம தேவதைகளின் கோயில்கள், நன்ருக நிர்வகிக்கப்படுவதில் சங்கம் கவனம் செலுத்துதல் வேண்டும். அதற்காக உரிய அதிகாரிகளைக் கண்டு பேசித் தொடர்பு கொண்டு, காலத்தில் தக்க நடவடிக்கைகள் எடுக்கும்படி செய்தல் வேண்டும். இயன்ற எல்லா ஒத்துழைப்பு உதவிகளையும் கோயில் அலுவலர்களுக்குக் கொடுத்து நமது சமய – சமூக பழக்க வழக்கங்களின்படி கோயில்களின் திருவிழாக்கள் நடக்கும்படி செய்வதுடன், பூசாரிகளுக்கும், மற்றும் திருக்கோயில் ஊழியர்களுக்கும் போதிய ஊக்கமும் அளிக்க வேண்டும்.

(9) சங்கமானது குறிப்பாகத் தேர்த் திருவிழாவுக்கு ஏற்பாடு செய்து அஃது ஒழுங்காக முறைப்படி நடக்கும்படியும், தேர் இழுத்தலில் அப்பகுதியிலுள்ள இந்து சமயத்தின் பல்வேறு இனங்களைச் சார்ந்த மக்கள் எல்லோரும் தீவிரமான பங்கு எடுத்துக்

கொள்ளும்படியும், தக்க முயற்சிகள் எடுத்துக் கொள்ளுதல் வேண்டும்.

(10) எங்கே கோயில்களில் தேர் இல்லையோ, அல்லது எங்கே தேர்த்திரு விழாவானது நின்று போயிருக்கிறதோ, அங்கே தகுந்த தேர்கள் செய்யப்படுவதற்கும், அல்லது தேர்த்திரு விழாக்கள் மறுபடியும் நடக்கும்படி செய்வதற்கும், சங்கமானது நடவடிக்கைகள் எடுக்க வேண்டும்.

(11) உள்ளூர்ச் சங்கமும், சமயப்பிரசாரத்திற்காக அப்பகுதிக்குச் செல்லும் பிரச்சாரகர்களும், கிராம தேவதையின் கோயில்களில் நடக்கும் வழக்கமான விழாக்கள் முறையாக நடைபெறுவதற்கு ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(12) சங்க உறுப்பினர்கள், அப்பகுதியில் வாழும் இந்து மக்களின் வீடுகளுக்குச் சென்று, பிடி அரிசி உண்டிகள் வைத்து, அவற்றின் மூலம் அவ்வப்போது அரிசி சேகரித்தல் வேண்டும். அங்ஙனம் சேகரிக்கப்பெறும் அரிசியைக் கொண்டு உள்ளூர்ச் சிவ விஷ்ணு கோயில்களில் நைவேத்தியம் செய்வித்து, அதனைச் சலுகை விலையில் கடவுட் பிரசாதமாக வழங்கும்படியும், அவ்வழியில் கிடைக்கும் தொகையை மூலதனமாக வைத்து நிரந்தரமான அடிப்படையில் கோயில்களில் நைவேத்தியத்திற்கும், பள்ளி மாணவர்களுக்கு மதிய உணவு வழங்கவும், திருக்கோயில்களில் குறைந்த ஊதியத்தில் பணி செய்யும் உழவாரம் - திருவலகு - திருமெழுக்கு செய்பவர்களுக்கு வழங்கவும் ஏற்பாடு செய்யலாம்.

(13) உள்ளூர்ப் பகுதியில் பணி புரியும் பிரசாரகர்கள் அல்லது தகுதியுடைய மற்றவர்களைக் கொண்டு, அப்பகுதியைச் சேர்ந்த சிறைச்சாலைகளிலுள்ள கைதிகள், மருத்துவ மனைகளிலுள்ள பிணியாளர்கள், சீர்திருத்தப் பள்ளிகளிலுள்ளவர்கள் ஆகியோரைச் சென்று காணவும், அவர்களுக்குத் திருநீறு, துளசி போன்ற கடவுட் பிரசாதங்களை வழங்கவும், கைதிகளுக்கும் இளங் குற்றவாளிகளுக்கும், எதிர்காலத்தில் நல்வாழ்வு வாழ்வதற்கேற்ற அறிவுரைகள் கூறவும், மருத்துவ மனைகளிலுள்ள பிணியாளர்களுக்கு ஆறுதல் அளிக்க இயன்ற எல்லா வகையான உதவிகளைச் செய்யவும், சங்கமானது ஏற்பாடு செய்தல் வேண்டும்.

(14) எந்தெந்தப் பகுதிகளில் இந்துக்கள் தம்முடைய குழந்தைகளைப் படிக்க வைப்பதற்குரிய பள்ளிக் கூடங்கள் இல்லாமல் துன்புறுகின்றனரோ அங்கெல்லாம் இந்து சமயத்தின் நீதி போதனையையும் சமயத் தத்துவக் கல்வியையும் பாடத் திட்டத்தில் சேர்த்துக் கற்பிக்கக்கூடிய கீழ்த் திசைக் கலைப் பள்ளிகளையும், மற்றும் பிற கல்வி நிலையங்களைச் சங்கம் தொடங்கிப் பணி செய்ய வேண்டும்.

(15) தன்னுடைய பகுதியிலுள்ள இந்து அனாதை இல்லங்கள் நன்ருக நடைபெறும்படி சங்கங்கள் வேண்டிய உதவிகளைச் செய்தல் வேண்டும்.

(16) தன்னுடைய பகுதியில் அல்லது அருகில் கிடைக்கும் மருத்துவ சிகிச்சை போதியதாகவோ பொருந்திய தாகவோ இல்லாமலிருந்தால் சங்கமானது மருத்துவ விடுதிகள் தொடங்கி நடத்துவதற்குரிய திட்டத்தினை அனுப்புதல் வேண்டும். அம் மருத்துவ விடுதிகளில் ஆயுர்வேதம், சித்தம், ஹோமியோபதி அல்லது அல்லோபதி மருத்துவங்களில் அப்பகுதிக்கு மிகவும் பொருத்தமானது என்று கருதப்படும் ஏதாவது ஒரு முறையில் சிகிச்சை அளிக்கப்படலாம்.

(17) மாவட்டக் குழுக்கள் சங்கங்கள் உதவியுடன் அந்தந்தப் பகுதியில் வாழும் இந்து சமூகத்தினரின் வாழ்க்கை மேம்பாட்டுக்காகக் கூட்டுறவு முறையில் தொழில்களைத் தொடங்கித் திறம்பட நடத்தும் முயற்சியில் ஈடுபட வேண்டும்.

(18) இந்து சமூகத்தில் நிலவும் தீண்டாமை, சாதி வேற்றுமை முதலியவைகளை நீக்கி ஒரு குல உணர்வைத் தோற்றுவித்து வளர்த்தல்:

## 6. பேரவை ஆலோசனைக்குழு:

(19) பேரவைத் தலைவரைத் தலைவராகவும், பேரவை துணைத் தலைவரைத் துணைத் தலைவராகவும் கொண்ட ஆலோசனைக்குழுவை மாநிலக்குழு நியமிக்கும். ஆலோசனைக் குழுவின் உறுப்பினர்கள் எண்ணிக்கை (தலைவர், துணைத் தலைவர் நீக்கி) 49 ஆகும். இந்த நாற்பத்தொன்பது பேர்களில் 12 பேர்கள் அறங்காவலர்களிலிருந்தும், 7 பேர்கள் மாநில சட்டமன்றம் - சட்டப் பேரவை - நாடாளு

நியமனம் பெற்ற உறுப்பினர்கள் ஒவ்வொருவரும் மூன்று ஆண்டு களுக்குப் பதவி வகிப்பார்கள்.

(30-7-75 மாநிலக் குழுத் தீர்மானப்படி சேர்க்கப்பட்டது.)

மன்ற உறுப்பினர்களிலிருந்தும், 30 பேர்கள் இந்து சமய வளர்ச்சியில் ஆர்வமுடையோரிடமிருந்தும் நியமிக்கப்பெறுவர்.

மாநில ஆலோசனைக் குழுவின் பணிகள் வருமாறு:

(1) மாநிலக்குழுவினால் குறிப்பிடப்பெறும் செய்திகளில் அறிவுரை வழங்குதல்.

(2) மாவட்டக் குழுக்கள் மாநிலக் குழுவின் செயலாளருக்கு அனுப்பும் காலாண்டு அறிக்கைகளைத் தணிக்கை செய்து, தன்னுடைய கருத்துக்களையும் குறிப்புக்களையும் மாநிலக்குழுவுக்கு அனுப்புதல்.

(3) அமைப்பு விதிகளின் நிபந்தனைகளைச் செயற்படுத்துவதற்குத் தொடர்புடைய வேறு ஏதேனும் செய்திகள் குறித்தும், தானே தன் சொந்த முறையில் மாநிலக்குழுவுக்கு ஆலோசனைகள் நல்குதல்

## 7. மாவட்டக்குழுக்களையும் சங்கங்களையும் திருத்தி அமைப்பதற்குரிய மாநிலக்குழுவின் அதிகாரங்கள்

(20) எந்தச் சங்கத்தையோ, வட்டக்குழுவையோ அல்லது மாவட்டக் குழுவையோ, மண்டலக் குழுவையோ திருத்தியமைப்பது தேவையும், விரும்பத்தக்கதும் ஆகும் என்று கருதினால் அங்ஙனமே செய்வதற்கு மாநிலக்குழுவின் தலைவருக்கு அதிகாரம் உண்டு. இத்தகைய செயல் முறைகள் அடுத்துக் கூடும் மாநிலக்குழுவின் ஏற்புக்கு வைக்கப்பெறுதல் வேண்டும்.

## 8. நிதி இயல் ஏற்பாடுகள்

(21) 'தமிழ்நாடு தெய்விகப் பேரவை நிதி' என்ற பெயரில் ஒரு நிதி அமைத்தல் வேண்டும். பின் வருவனவற்றைக் கொண்டு அந்நிதி அமையும் :—

(1) திருமடங்கள், கோயில்கள், குறிப்பிட்ட அறக் கட்டளைகள் ஆகியவை மனமுவந்து வழங்கும் ஆண்டியற் பங்களிப்புகள் (Contributions)

(2) மேற்குறித்த நிறுவனங்களின் சிறப்பியல் நன்கொடைகள் (Donations)

(3) இந்து அறநிலையப் பாதுகாப்புத் துறையின் பொது நல நிதியிலிருந்து வழங்கப்பெறும் மானியங்கள்

(4) மற்றும் கிடைக்கப்பெறும் நன்கொடைகள்.

22. மாநிலக் குழுவின் செயலாளர் ஒப்புதல் பெற்ற பிறகே மாவட்டக் குழுவின் தலைவர் நன்கொடைகள் திரட்டுதல் வேண்டும். அங்ஙனம் திரட்டப்பெறும் நன்கொடைகள், செயலாளர் வெளியிடும் அச்சிட்ட எண்கள் பதித்த ரசீதுகள் தருவதின் மூலமாகவே, ஏற்றுக் கொள்ளப்படுதல் வேண்டும்.

(23) பேரவையின் நோக்கங்களை நிறைவேற்றுவதற்குத் தேவையான நிதி உதவிகளையும் (Grants) நிதி ஒதுக்குதல்களையும் (Appropriation) மாநிலக்குழு அனுமதித்து வழங்குதல் வேண்டும்.

(24) மாநிலக் குழுவினால் தேர்ந்தெடுக்கப்பெறும் தணிக்கையாளர் (Auditor) ஒவ்வொரு ஆண்டும் பேரவை கணக்குகளைத் தணிக்கை செய்தல் வேண்டும். தணிக்கையாளர் ஓர் ஆண்டுக் காலம் பதவி வகிப்பார். மீண்டும் தேர்ந்தெடுக்கப்படுவதற்கும் அவர் தகுதியுடையவராவார்.

## 9. விதிகள் இயற்றுதல்

(25) அமைப்பு விதிகளை ஒட்டி அதற்கு முரண்படாத வகையில் அதன் நிபந்தனைகளைச் செயற்படுத்துவதற்குத் தேவையென்றோ, நலம் அளிப்பன என்றோ கருதப்பெறும் விதிகளை இயற்ற, மாநிலக்குழுவிற்கு அதிகாரமுண்டு.

## 10. அமைப்பு விதிகள் திருத்துதல்

(26) மாநிலக் குழுவானது அதற்கென்று சிறப்பு முறையில் கூட்டப் பெறும் கூட்டத்திற்கு வந்துள்ள உறுப்பினர்களின் பெரும்பான்மையான வாக்கின் மூலம் அமைப்பு விதிகளைத் திருத்தி மாற்றி அமைக்கலாம். அத்தகைய ஒரு சிறப்பியற் கூட்டத்திற்கு 25 நாட்களுக்குக் குறையாமல், முன்னறிவிப்புக் கொடுக்கப் பெறுதல் வேண்டும்.

## 11. அமைப்பு விதிகளின் துவக்கம்

(27) இந்த அமைப்பு விதிகள் 1966-ஆம் ஆண்டு ஜூன் மாதம் 13-ஆம் தேதி முதல் நடைமுறைக்கு வரும்.

# தமிழ்நாடு தெய்விகப் பேரவை

சென்னை-600 018.

## விதிகள்

## பகுதி-1

பேரவையின் அமைப்பு விதிகள் 25-ஆம் பிரிவின்கீழ் இயற்றப்பெற்று 10-12-1966 அன்று கூடிய கூட்டத்தில் மாநிலக் குழுவினல் அங்கீகரிக்கப்பெற்ற விதிகள்.

1. இந்த விதிகள் "தமிழ்நாடு தெய்விகப் பேரவை விதிகள்" என வழங்கப்படும்.

2. இந்த விதிகளில் :

1. பின்வரும் சொற்கூறுகள், அமைப்பு விதிகளில் இரண்டாவது பிரிவின் கீழ் வருவன எப்பொருளைக் குறிக்குமோ, அப்பொருளையே குறிப்பனவாகும்.

(அ) மடாதிபதி உறுப்பினர்

(ஆ) ஆணையர்

(இ) துணை ஆணையர்

(ஈ) உதவி ஆணையர்

(உ) அமைப்பு விதிகள்

(ஊ) சங்கம்

(2) 'மாவட்டக் குழு என்பது, அமைப்பு விதிகளின் 12-ஆம் பிரிவிற்கு ஏற்பக் கூட்டுவிக்கப்பெற்ற மாவட்டக் குழுவைக் குறிக்கும்.

(3) 'பதிப்பாளர் குழு' என்பது, அமைப்பு விதிகள் 6 (1) பிரிவிற்கு ஏற்பக் கூட்டுவிக்கப்பெற்ற குழுவைக் குறிக்கும்

(4) 'பேரவை' என்பது தமிழ்நாடு தெய்விகப் பேரவையைக் குறிக்கும்

(5) 'செயலாளர்' என்பது மாநிலக் குழுவின் செயலாளரைக் குறிக்கும்.

(6) 'மாநிலக் குழு' என்பது அமைப்பு விதிகளின் மூன்ருவது பிரிவின்கீழ்க் கூட்டுவிக்கப்பெற்ற மாநிலக் குழுவைக் குறிக்கும்.

(7) ‘ஆண்டு’ என்பது ஜூலை முதல் தேதியில் தொடங்கி அடுத்து வரும் ஜூன் 30–ஆம் தேதி யோடு முடியும் பசலி ஆண்டைக் குறிக்கும்.

அமைப்பு விதிகள் 3 (3) பிரிவில் குறிப்பிடப் பெற்றுள்ள மாநிலக் குழுவின் இலச்சினையானது, செயலாளரின் பொறுப் பில் இருக்கும்.

## பகுதி-2

### மாநிலக் குழுவின் கூட்டங்கள்

மாநிலக் குழுவின் கூட்ட நிகழ்ச்சிகள் எல்லாம் நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் செயலாளரால் பதிவு செய்து கொள்ளப்படவும், அவைகள் தலைமை தாங்கும் உறுப்பினரால் அங்கீகரிக்கப் பெறவும் வேண்டும். நிகழ்ச்சிக் குறிப்புகளின் புத்தகமானது செயலாளரின் பாதுகாப்பில் இருத்தல் வேண்டும்.

(8) ஒரு கூட்டத்தில் ஏதேனும் ஒரு பொருள் பற்றிக் கலந்துரையாடல் நிகழ்ந்தால் அது கூட்டத்திற்கு வந்திருக்கும் பெரும்பான்மை அங்கத்தினர்களின் இசைவைக் கொண்டு தீர்மானிக்கப் பெறல் வேண்டும்.

(9) வாக்களிப்புகள் சமமாக இருக்க நேர்ந்தால்—தலைமை தாங்கும் உறுப்பினரின் இரண்டாம் முறை வாக் கானது நிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகத்தில் வரை யறுத்துச் சிறப்பாகப் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(10) ஒவ்வொரு கூட்டத்திற்கும், உரிய நிகழ்ச்சி நிரல் செயலாளரால் தயாரிக்கப்படவும், தலைவரால் அங்கீ கரிக்கப்படவும் வேண்டும். அதன் ஒரு பிரதியானது உறுப்பினர்கள் ஒவ்வொருவருக்கும் கூட்டத்தின் அழைப்புடன் அனுப்பப் பெறுதல் வேண்டும்.

(11) அமைப்பு விதிகளின் 5 ஆவது பிரிவிற்கு இணங்கச் சுற்றறிக்கையின் மூலம் எடுக்கப்பெற்ற மாநிலக் குழுவின் தீர்மானங்கள், அத்தகையனவாக நிகழ்ச்சிக் குறிப்புப் புத்தகத்தில் பதிவு செய்யப் படவும், செயலாளரால் கையெழுத்திடப்பெறவும் வேண்டும். அங்ஙனம் செய்யப்பெற்ற பதிவானது, மாநிலக் குழுவின் அடுத்த கூட்டத்தில் வாசிக்கப் படவும், தலைவரால் கையெழுத்திடப் பெறவும் வேண்டும்.

## பகுதி-3

### நிதி இயல்

(12) ஒவ்வொரு பசலி ஆண்டுத் தொடக்கத்திற்கும் குறைந்தது மூன்று மாதங்களுக்கு முன்னரே மாநிலக் குழுவின் ஓர் ஆண்டிற்குரிய வரவு செலவு அறிக்கையைத் தயாரித்தல் செயலாளரின் கடமை யாகும். இந்த நிபந்தனைக்குட்பட்டு, அத்தகைய வரவு செலவுத் திட்ட முதல் வரைவானது, துணைத் தலைவரால் குறிப்பிடப்பெறும் ஒரு தேதிக்கு முன்னர்த் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(13) மாநிலக் குழுவின் துணைத் தலைவர், தலைவர் ஆகியோ ரின் இசைவு பெற்ற பிறகு, வரவு செலவுத் திட்ட அறிக்கையின் பிரதிகள், மாநிலக் குழுவின் உறுப் பினர்களுக்குக் கூட்டத்தின் நிகழ்ச்சி நிரலுடன் அனுப்பப்பெறுதல் வேண்டும்.

(14) 1. அமைப்பு விதிகளின் 21 ஆம் பிரிவில் குறிக்கப் பெற்ற, பேரவையின் நிதியானது, சென்னையிலுள்ள இந்திய அரசு வங்கியின் ஒரு கிளையில் 'தமிழ்நாடு தெய்விகப் பேரவை நிதி' என்ற பெயரில் இரண்டு கணக்குகளாக வைக்கப்படல் வேண்டும். கணக்கு எண். 1. மாநிலக்குழுவின் தலைவராலும், கணக்கு எண். 2 செயலாளராலும் இயக்கப்பெறல் வேண்டும்.

2. நிதியின் எல்லா வரவுகளும் கணக்கு எண் 1க்கே செலுத்தப்படுதல் வேண்டும். இக்கணக்கிலிருந்து பெறும் மீட்புகள் அனைத்தும் கணக்கு எண். 2இன் சார்பில் அளிக்கப்பெறும் உண்டியல்கள் மூலமாகவே நடைபெறுதல் வேண்டும்.

3. கணக்கு எண்–2 பேரவையோடு தொடர்புடைய பணிகளுக்காக மாநிலக் குழுவினால் இசைவு அளிக்கப் பெற்ற செலவுகளுக்கு மட்டுமே உரியதாக இருத்தல் வேண்டும்.

(15) மாநிலக் குழுவினால் அப்போதைக்கப்போது அனு மதிக்கப்பெற்ற வரவு செலவுத் திட்ட ஏற்பாடு களுக்கு இணங்கச் செலவுக்குத் தேவைப்படும் பொழுது வங்கியிலிருந்து பணம் எடுப்பதற்குரிய பணத் தொகையின் அளவைத் துணைத் தலைவர் வரையறை செய்வார்.

(16) 1. வரவு செலவுத் திட்டத்திற்கு இணங்க, செலவு களுக்காகச் செயலாளர் கேட்டுக்கொள்ளும்போது, தேவையான நிதியைக் கணக்கு எண் 2 இல் எல்லா வரவு செலவுகளுக்கும் உரிய திருத்தமான முறை யான கணக்குகளை வைத்துக் கொள்வது தலைவரின் கடமையாக இருத்தல் வேண்டும்.

2. தன்னால் வாங்கப் பெறுவனவும், செலவு செய்யப் படுவனவும் ஆகிய எல்லாத் தொகையையும் குறித்துத் திருத்தமான முறையான கணக்கு வைத்துக் கொள் வது செயலாளரின் கடமையாக இருத்தல் வேண்டும்.

3. ஒவ்வொரு மாத முடிவிலும் அடுத்து வரும் மாதத் தில் 10 ஆம் தேதிக்குள் வரவு செலவுகள் பற்றிய மாதாந்திர அறிக்கை ஒன்றைத் தயாரித்துச் செயலாளரால் தலைவருக்கு அனுப்பப்பெறுதல் வேண்டும்.

(17) ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும் வரவு செலவு கள் பற்றிய கணக்குகளின் தொகுப்பு அறிக்கை ஒன்று, செயலாளரால் தயாரிக்கப்பெற்று ஆணை யருக்கு அனுப்பப்படுதல் வேண்டும்.

(18) ஒவ்வொரு ஆண்டிற்கும் உரிய கணக்குகளின் தொகுப்பு அறிக்கை ஒன்று கையிருப்பு, வங்கியிருப்பு ஆகிய விவரங்களுடன் தலைவர், செயலாளர் ஆகி யோர்களால் கையெழுத்திடப்பெற்று மாநிலக் குழு வின் கூட்டத்தில் ஒப்புதல் பெறுவதற்காக வைக்கப் படுதல் வேண்டும்.

(19) மாநிலக்குழு அலுவலகத் தபால் செலவு, பயணச் செலவு போன்ற சில்லறைச் செலவினங்களுக்காக ரூ. 250/- செயலாளரிடம் நிரந்தரமான முன் பணம் இருத்தல் வேண்டும்.

(20) செயலாளரிடமுள்ள நிரந்தர முன்பணமானது பேரவையின் நிதியில் இருந்து எடுப்பதன் மூலம் அப்போதைக்கப்போது, குறை நிரப்பம் செய்து கொள்ளப்படுதல் வேண்டும்.

(21) 1. ரூ. 250-10-400 ஊதிய அளவில் எழுத்தர் ஒருவரைத் தலைவர் நியமித்துக்கொள்ளலாம். இந்து சமய அறநிலையத்துறையில் வழங்கப்பெறும் அளவில் பஞ்சப்படியும், மற்றைய படிகளும் பெறுவதற்கு அந்த எழுத்தர் உரிமையுடையவராவார்.

2. செயலாளர் அலுவலகத்தில் பின்வரும் பணியாளர் தொகுதி இருத்தல் வேண்டும். எல்லா நியமனங்களும் துணைத் தலைவரின் இசைவிற்கு உட்பட்டு. செயலாளரால் நியமனம் செய்யப்பட வேண்டும். முதலில் எல்லா நியமனங்களும் தற்காலிகமாக இருத்தல் வேண்டும். பின்னர் பொருத்தமானவர்களென்று கருதுகிறவர்களின் நியமனங்கள் துணைத் தலைவர் அவர்களின் இசைவு பெற்று நிரந்தரமாக்கப்பட வேண்டும். நிரந்தரமாக நியமனம் செய்யப்பட்டவர்களே ஆண்டு ஊதிய உயர்வு பெறத் தகுதி உடையராவர்.

| பதவியின் பெயர். (1) | எண்ணிக்கை. (2) | ஊதிய அளவு. (3) | தகுதி. (4) |
|---|---|---|---|
| 1. மேலாளர் | ஒன்று | 350-15-500-20-600 | அறநிலைய ஆட்சித் துறையில் கண்காணிப்பாளராகப் பதவி வகிப்பவர்களே இப்பதவி பெற அருகதையுடையவர்கள். |
| 2. உதவியாளர் | ஒன்று | 250-10-400 | குறைந்தது பள்ளி இறுதி ஆண்டு வரை படித்திருக்கவேண்டும். |
| 3. எழுத்தர் | ஒன்று | 200-5-250-10-300 | ஷை |
| 4. தட்டச்சர் (அல்லது) சுருக்கெழுத்தர். | ஒன்று | 200-5-250-10-300 | தட்டச்சராயின் ஆங்கிலத்தில் உயர்நிலைத் தேர்வும் பெற்று இருக்க வேண்டும். தமிழில் கீழ்நிலைத் தேர்வும் இருக்க வேண்டும். சுருக்கெழுத்தராயின் கீழ்நிலை தேர்வு பெற்று இருக்கவேண்டும். |
| 5. நிழற்படக் கருவி இயக்குநர் | ஒன்று | 200-5-250-10-300 | இவர் அரசாங்கத் தொழிற் பயிற்சிப் பள்ளியில் மெஷினிஸ்ட் அல்லது எலக்டிரிஷியன் அல்லது ஒயர்மேன் பயிற்சி பெற்றவராய் இருத்தல் வேண்டும். |
| 6. சிற்றெழுத்தர் | ஒன்று | 140-3-155-4-175-5-210 | மூன்ருவது படிவத்தில் தேர்ச்சி பெற்றவராக இருக்க வேண்டும். |

| பதவியின் பெயர் | எண்ணிக்கை | ஊதிய அளவு | தகுதி |
| --- | --- | --- | --- |
| (1) | (2) | (3) | (4) |
| 1. மேலாளர் | ஒன்று | 300-15-500-20-600 | அறநிலைய ஆட்சித்துறையில் கண்காணிப்பாளராகப் பதவி வகிப்பவர்களோ அல்லது அத்துறையில் தேர்வு நிலைக் கண்காணிப்பாளராகப் பதவி வகித்து ஓய்வு பெற்ற அறுபது வயதிற்குட்பட்ட ஒருவரோ துணைத் தலைவர் மூலம் நியமனம் பெற அருகதை யுடையவர் ஆவர். |

(30-7-75 மாநிலக் குழுத் தீர்மானப்படி திருத்தம், செய்யப்பட்டது.)

| (1) | (2) | (3) | (4) |
| --- | --- | --- | --- |
| 7. வலவர்கள் | இரண்டு | 150–4–170–5–225 | ஒருவர் லேசான வாகனங்களை ஓட்டவும் மற்றவர் கனமான வாகனங்களை ஓட்டவும் தகுதிச் சான்று பெற்று இருக்க வேண்டும். |
| 8. கடைநிலை ஊழியர்கள் | இரண்டு | 130–3–140–4–180–5–195 | |
| 9. கூட்டி, இரவு காவல், தோட்ட வேலை | ஒன்று | 130–3–140–4–180–5–195 | |

மேற்குறித்த பணியாளர்களுக்கு அறநிலையத் துறையில் வழங்கப் பெறும் அதே அளவில் சிறப்புப் படி ஊதியம், பஞ்சப் படி, நகர ஈட்டுப்படி, வீட்டு வாடகைப்படி முதலியன வழங்கப் பெறும்.

(3) பேரவையில் நியமனம் பெறும் ஒவ்வொருவரும் பணியில் சேர்ந்த தேதிமுதல் தொடர்ந்து மூன்றாண்டு காலத்தில் இரண்டாண்டு காலம் இடையீடின்றி 'த்குதி' காண் பருவத்தில் (Probationer) இருப்பார். திருப்திகரமாய் இந்தத் தகுதி காண் பருவத்தைக் கடந்தவர்கள் பேரவையின் நிரந்தரமான பணியாளராகக் கருதப்படுவர்.

ஓராண்டு பணியைத் திருப்திகரமாய் முடித்தவர்கள் பணியிற் சேர்ந்த தேதிமுதல் 20 நாட்களுக்கு ஒரு நாள் என்ற விகிதத்தில் சம்பளத்துடன் கூடிய ஈட்டிய விடுப்பு எடுத்துக்கொள்ள உரியவராவர். ஈட்டிய விடுப்பு 50 தினங்களுக்கு மேல் சேர்த்து வைக்க முடியாது. எந்த ஒருவருக்கும் ஒரே சமயத்தில் 30 நாட்களுக்கு மேல் ஈட்டிய விடுப்பு அளிக்கப் படமாட்டாது.

இந்த விதி பேரவைப் பிரச்சாரகர்களுக்கும் பொருந்தும்.

(22) மேலாளர், துணைத் தலைவரால் குறிப்பிடப்பெறும் அளவுக்குக் காப்புநிதி செலுத்துதல் வேண்டும்.

(23) துணைத் தலைவரால் அனுமதிக்கப்பெறும் பயணங்களைச் செயலாளர் மேற்கொள்ளுதல் வேண்டும்.

தனது உத்தியோகத் தரத்திற்கான அதே பயணப் படி பேரவையின் நிதியிலிருந்து பெறுவதற்கு அவர் உரிமை உடையவராவார்.

பேரவையின் பணியாளர் தொகுதியைச் சேர்ந்த பணியாளர்கள் பேரவை அலுவல்களுக்காக மேற் கொள்ளும் பயணங்களுக்கு அதே தரத்தைச் சேர்ந்த அரசு அலுவலர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் அளவில் பயணப்படி வழங்கப்பெறும்.

## பகுதி 4

### பதிப்பாளர் குழு

(24) பதிப்பாளர் குழுவானது மூன்று மாதத்திற்கொரு முறை அல்லது தேவைப்பட்டால் அடிக்கடி, பேரவை அலுவலகத்திலோ அல்லது தலைவருடன் கலந்து ஆய்ந்து தீர்மானிக்கப்பெறும் வேறு ஏதேனும் ஓர் இடத்திலோ கூடுதல் வேண்டும்.

(25) பதிப்பாளர் குழுவின் எல்லாக் கூட்டங்களுக்கும் செயலாளர் உடன் இருக்கவும், கூட்ட நிகழ்ச்சிகளைப் பதிவு செய்து கொள்ளவும் வேண்டும்.

(26) பதிப்பாளர் குழுவின் முடிவுகள் மாநிலக் குழுவின் இசைவிற்குப் பிறகு செயலாளரால் செயற்படுத்தப் படுதல் வேண்டும்.

(27) பதிப்பாளர் குழுவின் உறுப்பினர்கள், தமிழக அரசினரால் அமைக்கப்பெறும் முதல் வகுப்புக் குழுக்களின் உறுப்பினர்களுக்கு அனுமதிக்கப்பெறும் அளவிற் கேற்பப் பயணப்படி பெறுவதற்கு உரிமையுடையவர்கள் ஆவர்.

(28) பதிப்பாளர் குழுவின் ஒவ்வொரு கூட்டத்திற்கும் இரண்டு வாரங்களுக்கு முன்னரே தெளிவான அறிக்கை கொடுக்கப்படுதல் வேண்டும்.

(29) குழுவின் எந்த ஓர் உறுப்பினராவது தொடர்ந்து மூன்று கூட்டங்களுக்கு வராமலிருந்தால், அவர் அடுத்த கூட்டத்தில் போதிய காரணம் காட்டப் பெற்றுக் குழுவினரால் மீண்டும் நியமிக்கப் பெற்றா லொழிய அவர் குழுவின் உறுப்பினராக இருத்தலை இழந்து விடுவார்.

## பகுதி-5

### மாநில ஆலோசகர் குழு

(30) பதிப்பாளர் குழுவில் நேரும் வெற்றிடம் மாநிலக் குழுவினுல் நிறைவு செய்யப்படும்.

(31) பேரவையின் தலைவர், பதிப்பாளர் குழுவின் ஏதேனும் ஒரு கூட்டத்திற்கு வர இயலாவிட்டால், அக்கூட்டத்திற்கு வந்துள்ள உறுப்பினர்களால் தேர்ந்தெடுக்கப் பெறும் உறுப்பினர் அதற்குத் தலைமை தாங்குவார்.

(32) ஒவ்வொரு உறுப்பினரும் வெளியூர்க்காரராக இருப்பின் ஒவ்வொரு நாள் அமர்வுக்கும் அமர்வுப் படியாக ரூ. 20/-ம், உள்ளூர்க்காரராக இருப்பின் ரூ. 10/-ம் பெறுவதற்கு உரியவர் ஆவர்.

(33) மாநிலக்குழுவின் செயலாளரே மாநில ஆலோசகர் குழுவின் செயலாளராக இருப்பார்.

(34) மாநில ஆலோசகர் குழு 58 ஆவது விதியின்படி மாவட்டக் குழுக்களிடமிருந்து மூன்று மாதங்களுக் கொருமுறை வரும் அறிக்கைகளை ஆராய்வதற்காக ஆண்டுக்கு நான்கு முறைகள் கூடுதல் வேண்டும். அந்தக் கூட்டங்களில், குழுவின் பணிகளுக்கு உட்பட்ட ஏனைய செய்திகள் குறித்தும்கூட ஆராயப்படலாம். தலைவர் அல்லது துணைத்தலைவரால் விரும்பப் பெற்றுல் மேற்கொண்டும் இக்கூட்டங்கள் நடத்தப் படலாம்.

(35) ஒவ்வொரு கூட்டத்திற்கும் 15 நாட்கள் தெளிவான அறிவிப்புக் கொடுக்கப்படுதல் வேண்டும்.

(36) கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல், கூட்ட அறிவிப்புடன் உறுப்பினர்களுக்குத் தெரிவிக்கப்படுதல் வேண்டும்.

(37) கூட்டத்தின் நிகழ்ச்சி நிரல், தலைவர், துணைத் தலைவர் ஆகியவர்களைக் கலந்து கொண்டு, செயலாளரால் தயாரிக்கப்படுதல் வேண்டும்.

(38) கூட்டங்களைப் பற்றிய நிகழ்ச்சிக் குறிப்புக்கள் நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் செயலாளரால் பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(39) கூட்டத்திற்கு வரும் உறுப்பினர்களுக்கு தமிழக அரசினரால் முதல்தரக் குழுக்களின் உறுப்பினர் களுக்கு அனுமதிக்கப்பெறும் கட்டண அளவை யொட்டிப் பயணப்படி வழங்கப்பெறுதல் வேண்டும்.

## பகுதி-6

(40) மாவட்டக் குழுவின் கூட்டங்களின் நிகழ்ச்சிகள் நிகழ்ச்சிக் குறிப்பேட்டில் பதியப்படவும், அதன் பிரதிகள் மாநிலக் குழுவின் செயலாளருக்கும், மாவட்டக் குழுவின் உறுப்பினர்களுக்கும், கூட்டம் நடைபெற்ற பிறகு ஒரு வாரத்திற்குள் அனுப்பப்படுதல் வேண்டும்.

(41) மாவட்ட, மண்டலக்குழுக்கள் தமது அலுவலகங்களுக்குத் தேவையான பணியாளர்களை மாநிலக் குழு ஒப்புதல் அளித்த நிதிநிலைத் திட்டத்தின் அடிப்படையில் நியமனம் செய்துகொள்ளலாம்.

(42) மாவட்டக் குழுவின் வரவு செலவுக் கணக்குகளைப் பேரவையின் கணக்குகளில் சேர்த்துக் கொள்ளுவதன் பொருட்டு, ஒவ்வொரு காலாண்டிற்கும், அடுத்து வரும் காலாண்டின் முதல் மாதம் 10 ஆம் தேதிக்குள் மாவட்டக் குழுவின் தலைவர்கள் மாநிலக் குழுவின் செயலாளருக்குக் கணக்கு அறிக்கைகள் அனுப்புதல் வேண்டும்.

## பகுதி-7

### சங்கங்கள்

(43) சங்கங்களின் பணிகளுக்குரிய செலவுக்குச் சங்கம் செலவழிக்கும் தொகையில் மாநிலக் குழு நிர்ணயம் செய்யும் விதிமுறைகளின்படி பேரவையின் செயலாளர் மானியம் வழங்குவார்.

(44) ஒவ்வொரு சங்கத்தின் தலைவரும் அப்போதைக்கப்போது செயலாளரால் அனுப்பப்பெறும் மானியத் தொகையை ஓர் ஒப்புதல்பெற்ற வங்கியிலோ அல்லது கூட்டுறவு வங்கியிலோ அல்லது அஞ்சல் அலுவலக வங்கியிலோ சங்கத்தின் பெயரால் மாநிலக் குழுச் செயலாளரின் இசைவோடு செலுத்தி வைக்கப் பெற்றுச் சங்கத்தின் தலைவரால் இயக்கப்படுதல் வேண்டும்.

(45) உண்டியல் புத்தகமும், பற்று வரவுப்புத்தகமும், சங்கத்தின் செயலாளரிடத்தில் இருத்தல் வேண்டும்.

(46) மாநிலக் குழுவினிடமிருந்து கிடைக்கப்பெறும் மானியங்கள் நீங்கலாக, ஒரு சங்கத்தின் சார்பில் வசூலிக்கப்பெறும் நன்கொடைகளும், பிற வசூல்

களும் அச்சங்கத்தின் தலைவரால், தெய்விகப் பேரவை யிலிருந்து பெற்ற ரசீதுப் புத்தகங்கள் மூலமே வசூலிக்கப் பெறுதல் வேண்டும்.

(47) மானியங்களிலிருந்து பெற்ற வரவுகள், செய்த செலவு கள் பற்றிய ஒழுங்கான கணக்குகளைத் திருத்தமாக நன்கு வைக்கப்படுகின்றனவா என்று பார்த்துக் கொள்வது சங்கத் தலைவரின் கடமையாகும்.

(48) ஒவ்வொரு சங்கத்திற்கும் உரிய வரவு செலவுகள் பற்றிய அறிக்கை ஒன்று, அந்தந்தப் பகுதியின் மாவட்டக்குழுத் தலைவருக்கு ஒவ்வொரு மாதமும் அடுத்து வரும் 10 ஆம் தேதிக்கு முன்னர் அனுப்பப் படுதல் வேண்டும். அத்தகைய அறிக்கைகள் ஒவ் வொரு மாத முடிவிலும் கையிலுள்ள தொகையின் இருப்பு, வங்கியிலுள்ள தொகையின் இருப்பு ஆகிய விவரங்கள் கொண்டதாக இருத்தல் வேண்டும். இத்தகைய மாதாந்திர அறிக்கைகள் மாவட்டக்குழுத் தலைவரால் படித்துப்பார்க்கப் பெற்று, மாநிலக் குழுவின் செயலாளருக்கு உடனே அனுப்பப் பெறுதல் வேண்டும்.

(49) சங்கத்தின் செயலாளரே, அதன் கணக்குகளின் நிர்வாகத்திற்கும், மாவட்டக் குழுவின் தலைவருக்குக் குறிப்பிட்ட காலத்திற்குள் மாதாந்திர அறிக்கைகள் அனுப்புதற்கும் பொறுப்புடையவர் ஆவார்.

(50) எந்த ஒரு சங்கமாயினும், மாதாந்திரக் கணக்கு அறிக் கைகளை அடுத்து வரும் மாத முடிவிற்கு முன்னரும் கூட அனுப்பவில்லை என்றால், மாவட்டக் குழுவின் தலைவர் மாநிலக் குழுச் செயலாளரின் கவனத்திற்கு இத் தவறுதலைக் கொண்டு வருதல் வேண்டும். அங்ஙனம் கால தாமதம் நேர்ந்ததற்குத் திருப்திகர மான விளக்கமும், உரிய கணக்குகளும் செயலாள ருக்கு மூன்று மாதத்திற்குள் கிடைக்க வேண்டும். அதுவரை அச் சங்கம் நிதி மானியம் பெறும் தகுதி நிறுத்தி வைக்கப்பெறும். மேலும், தாமதமாயின்

சங்கத்தை மாற்றி அமைக்கச் செயலாளர், தலைவருக்குப் பரிந்துரைசெய்வார். தலைவர் செயலாளரின் பரிந்துரையின் மீது உரிய நடவடிக்கைகளை எடுப்பார்.

(51) சங்கங்கள் வைத்து வரும் கணக்குகளை எப்பொழுது வேண்டுமாயினும், அப்பகுதியின் ஆட்சி எல்லைக்குரிய இந்து அறநிலைய ஆட்சித்துறையின் ஆய்வர்-முதன்மை சமயப் பரப்புநர், உதவி ஆணையர் ஆகியோர் பார்வையிட்டு ஆராயலாம்.

## பகுதி-8

(52) ஒவ்வொரு சங்கத்திலும் வைக்கப்பட்டு வரும் கணக்குகள், அப்பகுதியின் மாவட்டக் குழுவினால் இதற்கென நியமிக்கப்படும் பெருமக்களால் தணிக்கை செய்யப்படுதல் வேண்டும்.

(53) அமைப்பு விதிகளின் 25 ஆவது பிரிவிற்கிணங்க மாநிலக் குழுவின் கணக்குகளைத் தணிக்கை செய்பவர் எவரோ, அந்தத் தணிக்கையாளரின் தணிக்கைக்கு, மாவட்டக் குழுக்களால் வைத்து வரப்பெற்ற கணக்குகளும் உட்பட்டனவாகும்.

## பகுதி 9

### மண்டலக்குழு

(54) இந்து அறநிலைய ஆட்சித்துறைத் துணை ஆணையர் வட்டம் ஒவ்வொன்றுக்கும் ஒரு மண்டலக்குழு அமையும்

(55) மண்டலக்குழுவின் உறுப்பினர்கள் அந்த மண்டலத்தில் உள்ள மாவட்டக் குழுக்களின் தலைவர்-துணைத் தலைவர்-செயலாளர்கள் மண்டலக்குழுவின் உறுப்பினர்கள்.

(56) மண்டலக்குழு உறுப்பினர்கள் மண்டலக்குழுவின் தலைவரைத் தேர்ந்தெடுப்பர். துணை ஆணையர் மண்டலக்குழுவின் துணைத் தலைவராக இருப்பார்.

(57) மற்றபடி மாவட்டக் குழுக்களின் விதிகள் மண்டலக் குழுவிற்கும் பொருந்தும்.

## பகுதி 10

### பல பொருளியல்

(58) ஒவ்வொரு காலாண்டின் முடிவிலும், ஒவ்வொரு சங்கமும் மாவட்டக் குழுவின் தலைவருக்கு அக் காலாண்டில் செய்த தன்னுடைய பணிகளையும், தனக்கு நேர்ந்த ஏதேனும் இடையூறுகள் அல்லது எதிர் காலத்திற்குரிய ஆர்வக் குறிப்புக்களையும் பற்றிய ஓர் அறிக்கையை அனுப்புதல் வேண்டும். மாவட்டக் குழுவானது, சங்கங்களிடமிருந்து வரும் அத்தகைய அறிக்கைகளை ஆராயவும், அவற்றின் தொகுப்பான ஓர் அறிக்கையைத் தன்னுடைய கருத்துக்கள், குறிப்புக்கள் ஆகியவற்றுடன் மாநிலக் குழுவின் செயலாளருக்கு அனுப்பவும் வேண்டும். அமைப்பு விதிகளின் 19 ஆம் பிரிவினையொட்டி, மாவட்டக் குழுக்களின் அறிக்கைகள் மாநில ஆலோசகர் குழுவினுல் ஆராயப்பட்டு, அதனுடைய பரிந்துரைகளோடு மாநிலக் குழுவின் பார்வைக்கு வைக்கப்படுதல் வேண்டும்.

(59) இது வரையில் இவ்விதிகளில் வெளிப்படையாக வரையறுக்கப்பெற்ற செய்திகள் தவிர, மற்றும் பிற எல்லாச் செய்திகளும்கூட, மாநிலக் குழுவினுல் அவ்வப்பொழுது வெளியிடப்பெறும் பொது அல்லது சிறப்பு ஆணைகளாலும் அல்லது தீர்மானங்களினுலும் இயக்கப்பெறும்.

(ஒப்பம்) கே. எஸ். நரசிம்மன்
துணைத்தலைவர்

,, தவத்திரு குன்றக்குடி அடிகளார்
தலைவர்

,, அ. நாராயணசாமி
செயலாளர்

பேரவை அச்சகம், சென்னை-18.

# Certificate of Registration of Societies

ACT XXI OF 1860

S. No. 107 of 1966.

I hereby certify that THE TAMILNADU DEIVIKA PERAVAI has this day been registered under the Societies' Registration Act XXI of 1860.

Given under my hand at MADRAS, this TWENTY THIRD day of JUNE one thousand nine hundred and SIXTY SIX.

SEAL OF THE REGISTRAR OF MADRAS CHINGLEPUT DIST.

*Registrar of Assurances,*

MADRAS - CHINGLEPUT *District.*

New No. Regn. D. 137—3,086—14-8-54.